மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ம் நாள் வியாழக்கிழமை

அ.வ.எண். 22/21

பி.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---------------------------------------------------------------

பெயர்: ஷாஜகான் — தேதி : 02.04.26

வயது : — த/பெ :முகமது அலி

கிராமம் : — தொழில் :

மாவட்டம்:

---------------------------------------------------------------

<u>02.04.26 முதல் விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)</u>

1.தபசில் சொத்தில் இருந்த தென்னை மரங்கள் என்ன நிலையில் இருந்தன என்றால் மகசூல் தரும் நிலையில் இருந்தது. ஒரு சில மரங்கள் மகசூல் அளித்து வந்த நிலையில் இருந்தன என்றால் சரியல்ல. தபசில் சொத்தினை அளவீடு செய்யும் போது சர்வே கல் கண்டறியபடவில்லை என்றால் பக்கத்து இடத்தின் சர்வே கல் கண்டறியப்பட்டு ஒரு மீட்டர் தள்ளி வைத்து தபசில் சொத்து அளவீடு செய்யப்பட்டது.

2.என்னுடைய அறிக்கையில் சர்வே கல் கண்டறியப்பட்டதாக சொல்லப்பட்டவில்லை என்றால் சரிதான். ஆனால் கல்லை பார்த்து தான் அளவீடு செய்தேன். சர்வே கல்லை கண்டறிந்து அளவீடு செய்யாததால் தான் 1 மீட்டர் தள்ளி வைத்து அளவீடு செய்தேன் என்றும், சர்வே கல்லை கண்டறிந்திருந்தால் அதில் இருந்து தான் அளவீடு செய்திருப்பேன் என்றும் சொன்னால் தபசில் சொத்தில் சர்வே கல் காணப்படாததால் பக்கத்து இடத்தில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.02 19:24:41 +0530

இருந்த சர்வே கல்லில் இருந்து 1 மீட்டர் தள்ளி வைத்து அளவீடு செய்யப்பட்டது. மேற்படி கல் சம்பந்தப்பட்ட இடத்தில் ஒரு மாதத்திற்கு முன்பு அளவீடு செய்து நட்டப்பட்டது என தெரியவந்தது. நான் அவ்வாறு அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3.தபசில் சொத்தினை தென்புறத்தில் இருந்து அளவீடு செய்ததாக அறிக்கையில் சொல்லவில்லை என்றால் கல்லை நிர்ணயம் செய்வதற்காக மட்டும் தான் தென்புறத்தில் இருந்து அளவீடு செய்தோம். தென்புறத்தில் இருந்து அளவீடு செய்யும் போது அங்கும் சர்வே கல் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளால் அந்த இடத்தில் பென்சிங் போடப்பட்டுள்ளது. சர்வே கல்லில் இருந்து அளவீடு செய்யாமல் 1 மீட்டர் தள்ளி அளவீடு செய்ததால் தபசில் சொத்து துல்லியமாக நிர்ணயிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வேயர் மூலம் அளவீடு செய்து இரு பக்கமும் உள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் ஒரு மீட்டர் தள்ளி வைத்து அளவீடு செய்யப்பட்டது.

4.1 மீட்டர் வித்தியாசத்தை பொறுத்து தாவா வழக்கு பிரச்சனை இல்லை. நான் 1 மீட்டர் வித்தியாசத்தில் அளந்து வந்ததால் ஒவ்வொரு சர்வே எண்களிலும் ஒரு மீட்டர் வித்தியாசம் வந்தது என்றும், அதனால் தபசில் சொத்து சரியாக நிர்ணயிக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மற்ற சர்வே எண்களில் எந்த வேறுபாடும் வரவில்லை. அறிக்கையில் மேற்படி வேறுபாடு வரவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தபசில் சொத்தினை பொறுத்து

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.02 19:24:44 +0530

வேறுபாடு வரவில்லை என்பதால் மற்ற சொத்துக்களை பொறுத்து சொல்லவில்லை.

5.தபசில் சொத்து விபரத்தில் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் கொடுக்கப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை. ஆணையர் அறிக்கையில் 1ம் தபசில் 2ம் இலக்க சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள DEFG பகுதியின் 4 மால் அளவுகளின் படி அதன் விஸ்தீரணம் 23.67 செண்ட் என்றால் இருக்கலாம். 2ம் தபசில் சொத்தின் விஸ்தீரணம் 24 செண்ட் என்ற நிலையில் 0.33 செண்ட் குறைவாக நிர்ணயித்து அளவீடு செய்துள்ளேன் என்றால் பூமியில் உள்ள அளவுகள் படி அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

6.2ம் தபசில் சொத்து துல்லியமாக அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள DGIH பகுதியின் பரப்பு 2.83 செண்ட் என்றால் இருக்கலாம். 2ம் தபசில் 2ம் இலக்க சொத்தின் விஸ்தீரணம் 3 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் 2.83 செண்ட் என்று குறைத்து நிர்ணயம் செய்திருப்பதால் துல்லியமாக அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் கிழமேல், தென்வடல் அளவுகள் குறிப்பிடாத நிலையில் நானாக மேற்படி அளவுகளை நிர்ணயித்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணத்தின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.02 19:24:46 +0530

7.சர்வே எண் 311/1, 311/5, 311/6 ஆகியவை கூட்டு பட்டாவாகதான் உள்ளன என்றால் ஆம். அசோக் குமார் என்பவரின் ஆவணத்தின் அடிப்படையில் அளவீடு செய்ய பிரதிவாதிகள் தரப்பில் கொடுத்த குறிப்பாணையின் பேரில் அளவீடு செய்யவில்லை என்றால் வாரண்டில் அதன் அடிப்படையில் அளவீடு செய்ய சொல்லப்படவில்லை. வா.சா.ஆ 1ன் படி வாதி தரப்பில் ஆட்சேபனை செய்ததால் அளவீடு செய்ததால் பிரதிவாதிகளின் குறிப்பாணையின் படி நான் அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

8.ஆணையர் அறிக்கையில் 9 வது பத்தியில் வழக்குரை ஆவண எண் 1ன் படி அளவீடு செய்யயப்படவேண்டும் என்று பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பாணை தந்ததாகவும் வாதி தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக்கொள்ளாததால் அவ்வாறு அளவீடு செய்யப்படவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆவணங்களின் படி அளவீடு செய்ய வாரண்டில் குறிப்பிடவில்லை. தபசில் சொத்துக்களை துல்லியமாக நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN

Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.02 19:24:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.